# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 106/2011 வெங்கடேசன்  (வாசா1) தேதி:06.04.2026**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என்னிடம் காட்டப்படும் ஆவணமானது சர்வே எண்.603/1க்குரிய புலப்படநகல் என்றால் சரிதான். அதில் A புள்ளியில் இருந்து B புள்ளிவரை உள்ள துாரம் 738 லிங்ஸ் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 23.03.1983 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம் ஒ.எஸ்எண்.343/1982 வழக்கில் மாரியப்பசெட்டியாருக்கும் காலம்சென்ற இந்த வழக்கின் 1ம்பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி, 2ம்பிரதிவாதியின் தாயார் சரோஜினிதேவி ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. மாரியப்பசெட்டியாருக்கும் காலம்சென்ற இந்த வழக்கின் 1ம்பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி, 2ம்பிரதிவாதியின் தாயார் சரோஜினிதேவி ஆகியோர்களுக்கிடையே 15அடி தென்வடல் பாதை சம்பந்தமாக மேற்படி வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த பாதை என்பது மொத்தம் 38 பிளாட்டுகள் பாதை சம்பந்தப்பட்ட வழக்கு ஆகும். நான் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண்.603/1ல்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணுக்குரிய புலவரைபடம்தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.1** ஆகும். **பி.சா.ஆ.1** வரைபடத்தில் A புள்ளிக்கு மேற்கே 21 லிங்ஸ் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 21 லிங்ஸ் என்பது மந்திதோப்பு ரோட்டின் கிழமேல் அகலம் என்றால் சரிதான். **பி.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள 21 லிங்ஸ் என்பதின் அளவு 4.2மீட்டர் என்றாலும் 738 லிங்ஸ் என்பது 148.4மீட்டர் என்றாலும் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல்செய்யப்பட்ட சர்வேயர் வரைபடத்தில் கிழமேல் தென்தலை 145.4மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வடதலை அளவும் 145.4மீட்டர் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மந்திதோப்புசாலையில் அகலத்தை அளந்து காட்டும்போது கிழமேல் அகலம் 8.2மீட்டர் வந்தது என்றால் நான் கவனிக்கவில்லை. மேற்படி சாலையின் அகலத்தை சர்வேயர்

அளந்து காண்பித்தார் என்றாலும், ஆனால் நீதிமன்ற ஆணையர் அதுபற்றி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கின் சராம்சமே தபசில் சொத்திற்கு மேற்கே உள்ள மந்திதோப்பு செல்லும் ரோட்டின் விரிவாக்கத்திற்கு எங்கள் பிளாட்டுகளில் இருந்து இடம் எடுக்கப்பட்டுள்ளதால் எங்களுக்கு இடம்குறைந்துஉள்ளது என்றாலும் அதனால்தான் அதை அளந்துபார்க்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. 2015 ம்வருடம் நீதிமன்ற ஆணையர் தாக்கல்செய்த இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபின்னர் எங்கள் தரப்பில் மந்திதோப்புரோட்டை மட்டும் அளந்து நிர்ணயம்செய்ய ஆணையருக்கு உத்தரவிடகோரி குறிப்பாணை நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றம் நாங்கள் தாக்கல்செய்த மனுவில் மந்திதோப்புசாலையில் நீளம், அகலம் அளந்து தாக்கல்செய்ய உத்தரவு வழங்கியது என்றால் சரிதான். **பி.சா.ஆ.1** ஆவணத்தில் புலஎண்.603/1 ன் கிழமேல் அளவு 148.4 மீட்டர் என்றாலும் சர்வேயர் வரைபடத்தில் கிழமேல் 145.4 மீட்டர் எனகாட்டப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். பழையபுலவரைபடத்திற்கும் தற்போதைய வரைபடத்திற்கும் உள்ள அளவு வித்தியாசம் 3 மீட்டர் என்றால் சரிதான். அந்த 3 மீட்டர் என்பது சுமார் 10 அடி என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் நகரஅளவைக்கு முன்பு உள்ள வரைபடம் என்றாலும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட சர்வேயர் வரைபடம் நகரஅளவைக்குபின்னர் ஏற்பட்ட ஆவணம் என்றாலும் சரிதான். நீதிமன்ற ஆணையர் சாலையின் அகலத்தை 8.2 மீட்டர் என அளந்து காண்பித்தார் என்றால் நான் அதை பார்க்கவில்லை. எனது பிளாட்டுகளுக்கு மேற்கே உள்ள மந்திதோப்புசாலையின் கிழமேல் அகலம் சுமார் 25 அடிக்கும் அதிகமாக இருக்கும் என்றால் எனக்கு உறுதியாக தெரியாது. **பி.சா.ஆ.1** ன்படி உள்ள அளவைகாட்டிலும் தற்போது புலத்தில் சாலையின் அகலம் அதிகமாக உள்ளது என்றால் ஆவணங்களின்படி அவ்வாறுதான் உள்ளது.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**: பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்)D.மாரிக்காளை,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.